செ.வெ.எண் : 57 / ஆகஸ்ட் நாள் : 30.08.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## சட்டத்துடன் முரண்பட்ட மற்றும் ஆதரவு தேவைப்படும் குழந்தைகளின் மறுவாழ்வுக்கு நிதி அளிக்க விரும்புவோர்

## சமூக பாதுகாப்புத் துறையின் சார்பாக உள்ள அங்கீகரிக்கப்பட்ட வங்கிகணக்கில் செலுத்தலாம்

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

இராமநாதபுரம் மாவட்டம் சமூகப்பாதுகாப்புத்துறை, மாவட்டகுழந்தைகள் பாதுகாப்பு அலகின் சார்பில் இளைஞர் நீதிச்சட்டம் 2015 (பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) குறிப்பிட்டுள்ளபடி எளிதில் பாதிப்புக்கு உள்ளாக கூடிய குழந்தைகள், தனித்து விடபட்ட பாதுகாப்பு பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்துடன் முரண்பட்ட குழந்தைகளின் நலனை மேம்படுத்தவும், மறுவாழ்வு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் உதவ விருப்பமுள்ள தன்னார்வலர்கள், தனியார் நிறுவனங்கள், வியாபாரிகள், பொதுமக்கள் உதவி செய்யலாம். உதவி செய்ய விரும்புவோர் சென்னை, சமூகப்பாதுகாப்பு துறையால் உருவாக்கப்பட்டுள்ள இளைஞர் நீதிச்சட்டம் 2015,பிரிவு 105-ன்படி இளைஞர் நீதிநிதி என்ற பெயரில் சென்னை ராஜரத்தினம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளை கணக்குஎண் 358001000000671 (IFSC Code: IOBA0003580) நிதி அளிக்கலாம்

மேலும் விபரங்களுக்கு மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நீதிமன்றம் தென்புறம், இராமநாதபுரம் 623 504 என்ற முகவரியையும் 04567-231098 என்ற தொலைபேசி எண்ணையும் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**